முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1243

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.02.2023, வியாழக்கிழமை

1. பிரம்ம சூட்சும குருராஜனே
   பிரம்ம ரகசியம் அறிந்த அரங்கனே
   வரம்பல பெற்று என்சக்தியாக
   வையகத்தில் வாழுகின்ற மாதவராஜனே
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 11 ம் நாள், 23.02.2023 வியாழக்கிழமை)
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும்
   வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சுபகிருது சால் திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கனுக்கு சக்தி ஊட்டி
   தரணியில் உலகோரை ஞானவழி
   பக்திபட அரங்கன் சித்திவழி மாற்றி
   பாருலகில் ஞான உலகமாற்றம் செய்து அருள்புரிவேன்
4. அருள்புரிய அரங்கன் வழி உலக மக்கள்
   அவசியம் அனுகூல தீட்சை ஏற்று
   வரமென தொடர்ந்து வருதல் வேணும்
   வடிவேலன் என் ஜெபதபங்கள் முழங்க இனிதே
5. இனிதே சரவண ஜோதி ஏற்றி இந்த உலகோர் அரங்கனை தொடர்ந்து வர
   இலகுவாய் உலகமாற்றம் நடந்தேறும் காலமதில் உலகோருக்கு ஞானசித்திஎனும்
   கண்டுரைப்பேன் அழியாமை என்கின்ற பேரின்பம்
   வழுவாது அரங்கன் தவபலத்தால் வழங்குகின்ற அரங்கன் தர்மத்தாலும்
6. எளிதில் கிட்டி உலகோரெல்லாம்
   இந்த உலகை மாற்றும் ஞானிகளாக மாறுவர்
   மாறுதலை அரங்கனாலே நிகழ்த்த முடியும்
   மக்களெல்லாம் நம்பிவர இந்த மாற்றம் உடன் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–